*ஓர் ஆசிரியரின் உள்ளம் கண்காட்சி*

## <u>அறிமுகம்</u>

"நான் ஒரு மாணவனாக இருந்தபோது என்னில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியவர்களே என் வாழ்நாளில் ஆக அதிகமாக என் நினைவில் நிலைத்திருந்தவர்கள். அவர்கள் தங்கள் துறைகளில் மிகுந்த திறமையும் தகுதியும் பெற்றிருந்ததால் அல்ல, தங்கள் மாணவர்கள் அனைவர்மீதும், தனிப்பட்ட முறையில் என்மீதும், அவர்கள் காட்டிய தனிப்பட்ட நாட்டமும் அர்ப்பணிப்பும்தான் என் நினைவில் பதிந்தவை."

லீ குவான் யூ
சிங்கப்பூரை நிறுவிய பிரதமர்

நம்மில் பலருக்கும் நமது ஆசிரியர்களைப் பற்றிய இனிய நினைவுகள் இருக்கும். நாம் அவர்களை வெவ்வேறு காரணங்களுக்காக ஞாபகம் வைத்திருப்போம் - தாங்கள் கற்பிக்கும் பாடங்களின்மீது அவர்களுக்கிருந்த ஈடுபாடு; கற்பதில் நமக்கு ஆர்வத்தைத் தூண்டிய விதம்; அவர்கள் அடிக்கடி பயன்படுத்திய சொற்றொடர்கள் மற்றும் ஒப்பற்ற பாணி; அவர்களது நகைச்சுவை உணர்வு; அல்லது அவர்களுடன் மனம்விட்டுப் பேசிய தருணங்கள். இந்தப் பட்டியல் நீண்டுகொண்டே போகும். இவை அனைத்துக்கும் அப்பால், நமது ஆசிரியர்களைப் பற்றி நம் மனதில் ஆழப்பதிந்த ஞாபகமாக இருப்பது, அவர்களது மாணவர்களான நமக்கு தங்கள் உள்ளத்தில் அவர்கள் கொடுத்திருந்த இடம்.

ஆசிரியர்களின் உள்ளத்தில் இருப்பது என்ன?

மாணவர்கள் தத்தம் பலத்தையும் அடையாளத்தையும் கண்டறிய வழிகாட்டுவதற்கு எது ஆசிரியருக்கு அதிகாரம் அளிக்கிறது? ஆசிரியர்களுக்கு ஊக்கம் கொடுத்துத் தூண்டுவது எது?

எட்டு ஆசிரியர்களுடன் 1950களில் தொடங்கி இன்றைய காலகட்டம் வரையிலான சிங்கப்பூரின் கல்வியுலகில் பயணித்திடுங்கள் - ஒவ்வொரு பத்தாண்டுகளுக்கும் ஓர் ஆசிரியரை நீங்கள் சந்திப்பீர்கள். அவர்களது பார்வையின்வழி, அவர்களது காலகட்டத்தில் கற்பித்தல் எப்படி இருந்தது என்பதையும், அவர்களுக்கு வழிகாட்டிய காலத்தால் அழியாத விழுமியங்கள், நம்பிக்கைகள் என்னவென்பதையும் அனுபவித்துப் பாருங்கள்.

ஒரு புத்தகம்போல் வடிவமைக்கப்பட்டுள்ள இந்தக் கண்காட்சியின் பக்கங்களைப் புரட்டிப்பார்த்து, சிங்கப்பூரில் ஆசிரியராக இருப்பதன் அர்த்தத்தையும், பல்லாண்டு காலமாக நமது ஆசிரியர்களுக்கு ஊக்கம் கொடுக்கும் கூட்டு நோக்கத்தையும் கண்டறிந்திடுங்கள்.

இந்தக் கண்காட்சியைப் படைப்போர்:

HERITAGE CENTRE

Academy of Singapore Teachers
lead. care. inspire.

Ministry of Education
SINGAPORE

## <u>1950கள் - திருமதி ஈத்தல் டாரத்தி டெஸ்கர்</u>

நான் பிளேஃபேர் மதியப் பள்ளியின் தலைமையாசிரியர். குண்டர் கும்பல் நடவடிக்கைகளுக்குப் பெயர்பெற்ற டாய் செங் வட்டாரத்தின் மையப் பகுதியில், புறம்போக்குநிலக் குடிசைகளால் சூழப்பட்ட ஒரு மாடிக் கட்டடத்தில் அந்தத் தொடக்கப்பள்ளி அமைந்திருக்கிறது. நான் தலைமையாசிரியராக நியமிக்கப்பட்டிருப்பது இதுவே முதல் முறை. என் கவனிப்பின்கீழ் கிட்டத்தட்ட 550 மாணவர்கள் இருக்கின்றனர்.

| | |
|---|---|
|  | திருமதி டெஸ்கர் (1910-2005) 1926-ஆம் ஆண்டு பதினாறு வயதை எட்டவிருந்த சமயத்தில் ஆசிரியராகப் பணியாற்றத் தொடங்கி, 1965-ஆம் ஆண்டு ஹேக் பெண்கள் பள்ளியின் தலைமையாசிரியராக ஓய்வு பெற்றார். அவர் 1953 முதல் 1956 வரை பிளேஃபேர் மதியப் பள்ளியின் தலைமையாசிரியராக இருந்தார்.<br><br>*ஹேக் பெண்கள் பள்ளிக்கு நன்றி.* |

| | |
|---|---|
|  | *ஜேனட் அண்ட் ஜான்*, நூல் ஒன்று (முகப்புப்பக்கம்)<br>*ஜேனட் அண்ட் ஜான்*, நூல் இரண்டு (விரிந்த பக்கம்)<br>c. 1950<br><br>*கல்வி அமைச்சின் மரபுடைமை நிலையத் திரட்டின் மறுபதிப்பு.*<br><br>சிறுவர்களுக்கான ஆரம்பகால வாசிப்புப் புத்தகங்களான *ஜேனட் அண்ட் ஜான்* நூல் தொடர், “பார்த்துச் சொல்லும்” அணுகுமுறை மூலம் ஆங்கிலம் கற்பிக்கிறது. சிறுவர்கள் மொழியசைகளுக்குப் பதிலாக முழுச் சொற்களை வாசித்துப் புரிந்து கொள்கின்றனர். |

### <u>என் வாழ்வில் ஒரு நாள்</u>

| | |
|---|---|
|  | பிளேஃபேர் மதியப் பள்ளியில் தொடக்கநிலை இரண்டாம் வகுப்பு, 1952.<br><br>*சாங் குவாங் சே திரட்டு*, தேசிய நூலக வாரியத்திற்கு நன்றி. |

ஆசிரியராகப் பணியாற்றி வந்த நான், 1953-ல் தலைமையாசிரியராகப் புதிய பொறுப்பேற்றேன். எனக்கு உதவி செய்ய எழுத்தர் யாரும் இல்லை. பள்ளியை நானே சொந்தமாக நிர்வகிக்க வேண்டியிருந்தது. சில சமயங்களில் நான் தனிமையில் இருப்பதுபோல் தோன்றியதுண்டு. ஏனெனில், நான் எடுக்கும் தீர்மானம் சரியானதுதானா எனத் தெரிந்துகொள்ள விரும்பியபோது, ஆலோசனை கேட்பதற்கு எனக்கு யாரும் இல்லை. நான் ஆசிரியராக இருந்தபோது, நான் செய்வது அல்லது சொல்லித்தருவது சரிதானா எனக் கேட்பதற்கு நண்பர்கள் இருந்தனர். நல்ல வேளையாக, மற்ற தலைமையாசிரியர்களின் நட்பு எனக்கு விரைவில் கிடைத்தது.

சிறுவர்களின் கெட்டப் பழக்கங்களைத் திருத்துவதற்காக அவர்களைக் கண்காணிக்க அதிக நேரம் செலவிடுவேன். குப்பை போடுவது, கழிவறைகளைத் தவறாகப் பயன்படுத்தி அழுக்காக்குவது, ஒருவர் மற்றவரிடமிருந்து திருடுவது போன்ற கெட்டப் பழக்கங்கள் இருந்தன. நான் எப்போதும் அன்பாகச் சொல்லித் திருத்த விரும்புவேன். பள்ளிப் பிள்ளைகளிடம்கூட கடுமையாகப் பேசுவது எனக்குப் பிடிக்காது. சிலரிடம் அரிய திறமைகள் புதைந்திருக்கும் - அவர்களைக் கவனிப்பதன்வழி நம்மால் நிறையத் தெரிந்துகொள்ள முடியும்.

<u>என் மாணவர்கள்மீது எனக்கிருந்த அக்கறை</u>




பிளேஃபேர் மதியப் பள்ளியின் தொடக்கநிலை நான்காம் வகுப்பு மாணவர்கள், 1954.

*சாங் குவாங் சே திரட்டு*, தேசிய நூலக வாரியத்திற்கு நன்றி.

ஒவ்வொரு நாளும், நான் சிற்றுண்டிச்சாலைக்குச் சென்று, உணவுக் கடைக்காரர்கள் எங்கள் மாணவர்களுக்கு நல்ல உணவு தருகிறார்களா, விலை அதிகமாக இருக்கிறதா என்பதைக் கவனிப்பேன். எங்கள் மாணவர்கள் எலும்பு மஜ்ஜையுடன் பலம் பெற, ஒரு கடைக்காரரிடம் பெரிய எலும்புகளை வாங்கி குழம்பு சமைக்கச் சொன்னேன்.

நான் அலுவலகத்தில் இருக்கவேண்டிய நேரத்தில் பெரும்பகுதி கண்காணிப்புக்குச் செலவாகிவிடும். ஆனால், வேறு வழியில்லை. சிறுவர்கள்தான் முதலில் கவனிக்கப்பட வேண்டும். நான் செய்யவேண்டிய ஆக முக்கியமான காரியம் அதுவே.

என் மாணவர்களில் சிலர் மிகவும் ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்குச் சுத்தமான ஆடைகள் கிடைக்க, நானே சீருடை செய்து தருவேன். அதற்குச் சற்று நேரம் எடுக்கும் என்பதால், ஆசிரியர்களின் உதவியைப் பெறுவேன். எனக்கு ஓய்வு நேரம் இருக்கும்போது, சிறிய, நடுத்தர, பெரிய அளவுகளில் சீருடைகளுக்குத் துணி வெட்டுவேன்.




"சிலரிடம் அரிய திறமைகள் புதைந்திருக்கும் - அவர்களைக் கவனிப்பதன்வழி நம்மால் நிறையத் தெரிந்துகொள்ள முடியும்."

<u>மிரளவைத்த ஒரு பணி</u>

| | |
|---|---|
|  | பிளேஃபேர் பள்ளிக்கு அருகே, பாய லேபார் சாலையின் ஒரு காட்சி, 1955.<br><br>*F.W. யார்க் திரட்டு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்திற்கு நன்றி.* |

பள்ளிக் கட்டணம் வசூலிப்பது என்னை மிகவும் மிரளவைக்கும். நான் வசூலித்து முடிப்பதற்குள் நேரமாகிவிடும் என்பதால், வங்கிக்குச் செல்ல முடியாது. அதனால், பணத்தை வீட்டுக்கு எடுத்துச்செல்ல வேண்டும். ஒரு நாள், நான் கொள்ளைக்கு இலக்காகவிருந்தேன். குண்டர் கும்பல் என்னைக் கூர்ந்து பார்ப்பதை நான் கவனித்தேன். ஆனால், என் கைப்பையில் எதுவும் இல்லாததுபோல் நடந்து சென்றுவிட்டேன்.


வீட்டை அடைந்ததும், அழுக்குத்துணிகள் போடும் கூடையில் என் கைப்பையை ஒளித்துவைப்பேன். கொள்ளைக்காரர்கள் என் வீட்டினுள் புகுந்தாலும் கண்டுபிடிக்க மாட்டார்கள் அல்லவா. அழுக்குத்துணியை யார்தான் தொட விரும்புவார்கள்? மறுநாள் காலை, வங்கிக்குச் சென்று பணத்தைக் கணக்கில் போடுவேன். எனக்கு எவ்வளவு பயமாக இருந்தாலும், துணிச்சலாக இருப்பதுபோல் பாவனை செய்தாக வேண்டும்.

<u>அரிய நினைவலைகள்</u>

| | |
|---|---|
|  | கடற்கரைக்கு உலா சென்ற பிளேஃபேர் மதியப் பள்ளி மாணவர்கள், 7 ஜூன் 1954.<br><br>*சாங் குவாங் சே திரட்டு*, தேசிய நூலக வாரியத்திற்கு நன்றி |
|  | பிளேஃபேர் மதியப் பள்ளியின் விளையாட்டு தினத்தன்று ஓட்டப்பந்தயத்தில் ஓடத் தயாராகும் மாணவிகள், 27 மே 1954.<br><br>*சாங் குவாங் சே திரட்டு*, தேசிய நூலக வாரியத்திற்கு நன்றி |

அண்மைக்காலம் வரை, என் மாணவர்கள் அருகில் இருந்தும், காத்தோங்கில் இருக்கும் கடற்கரைக்குச் சென்றதில்லை. அவர்கள் வசிக்கும் அக்கம்பக்கத்தைத் தவிர வெளியிடம் எதுவும் அவர்களுக்குத் தெரியாது. அதனால், கடலோரச் சுற்றுலாவுக்கு ஏற்பாடு செய்யுமாறு என் ஆசிரியர்களிடம் கேட்டுக்கொண்டேன். என் மாணவர்களிடம் சுற்றுலா செல்ல வசதியில்லை. எனவே, பள்ளிக் கண்காணிப்பாளரைத் தொலைபேசியில் தொடர்புகொண்டு, என் பள்ளி நிதியைப் பயன்படுத்திக்கொள்ள அனுமதி பெற்றேன். நாசி லெமாக் மற்றும் பானங்களுடன் மாணவர்கள் கிளம்பினர்! மிகுந்த உற்சாகத்துடன் அவர்கள் பேருந்துகளில் ஏறிச் செல்வதைக் கண்டபோது உண்மையாகவே பெருமகிழ்ச்சி அடைந்தேன்.

என் மாணவர்களுக்கு அண்மைக்காலம் வரை கிடைக்காத மற்றோர் அனுபவம் பள்ளி விளையாட்டு தினம். நான் அதற்கு ஏற்பாடு செய்தபோது, அவர்கள் மகிழ்ச்சி அடைந்தனர். மாணவர்களுக்கு வெற்றிக் கோப்பைகள் கொடுக்காமல், அவர்களுக்குப் பயன்படக்கூடிய பொருட்களைத் தர முடிவு செய்தோம். ரப்பர் காலணிகள், காலுறைகள், சட்டைகள், பள்ளிப் பைகள், கைக்குட்டைகள் ஆகியவற்றை அவர்களுக்குப் பரிசளித்தோம்.

| | |
|---|---|
|  | பள்ளிப் பை<br>c. 1950கள் - 1970கள்<br><br>*கல்வி அமைச்சின் மரபுடைமை நிலையத் திரட்டு.*<br><br>இந்தப் பள்ளிப்பையில் ஒரு மாணவரின் பாடப்புத்தகங்களும் எழுதுபொருட்களும் எடுத்துச் செல்லப்பட்டன. சிங்கப்பூரில் முதுகுப்பைகள் பரவலாகப் பயன்பாட்டுக்கு வருவதற்குமுன், மாணவர்கள் இதுபோன்ற பள்ளிப்பைகளைத்தான் பள்ளிக்குத் தூக்கிச் சென்றனர். |
|  | சீருடை அணிந்த மூன்று பள்ளி மாணவர்கள் சாலையைக் கடப்பதற்காகக் காத்திருக்கின்றனர். ஆக மூத்தவர் (இடக்கோடியில்) அந்தக் காலகட்டத்து பள்ளிப்பையைக் கையில் பிடித்திருக்கிறார், c. 1965 - 1970.<br><br>*ஜார்ஜ் W. போர்ட்டர் திரட்டு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்திற்கு நன்றி.* |

<u>நீங்கள் வடித்த சிற்பம் நான்</u>

வளரும் பருவத்தில், ஆசிரியராக வேண்டும் என்ற எண்ணம் எனக்கில்லை. ஆனால், ஆசிரியர் பணி எனக்கு மிகுந்த மனநிறைவு தருவதை விரைவில் உணர்ந்தேன். எனக்குப் பிள்ளைகளுடன் இருப்பது மிகவும் பிடிக்கும். மாணவர்கள் என்னிடம் வந்து, "நீங்கள் வடித்த சிற்பம் நான்" என்று சொல்லும்போது அளப்பரிய ஆனந்தம் அடைவேன்.

*இதிலிருந்து எடுக்கப்பட்டது:*
*திருமதி ஈத்தல் டாரத்தி டெஸ்கருடன் வாய்மொழி வரலாற்று நிலையம் நடத்திய பேட்டி, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகம், பதிவெண்: 000436, 1984 - 1985.*

**<u>1960கள் - குமாரி நந்தா பண்டாரா</u>**

நான் காத்தோங்கில் உள்ள ஹேக் பெண்கள் பள்ளியில் அறிவியலும் கணிதமும் கற்பிக்க புதிதாகச் சான்றுபெற்ற ஆசிரியர். 1960-ஆம் ஆண்டு, நான் பணியில் சேர்ந்த முதல் நாள், தொடக்கநிலை ஆறாம் வகுப்பினுள் அடியெடுத்து வைத்தேன். அங்கு 44 ஜோடிக் கண்கள் என்னை நோக்கிப் பார்த்தன. அப்போது எனக்கு 22 வயது. என் மாணவர்களைவிட ஏறக்குறைய 10 வயதுதான் அதிகம் - அவர்களை எப்படிச் சமாளிக்கப் போகிறேன்?

| | |
|---|---|
|  | குமாரி பண்டாரா (1938 - ) தமது 22வது வயதில் 1960-ஆம் ஆண்டு ஹேக் பெண்கள் பள்ளியில் ஆசிரியராகச் சேர்ந்தார். அவர் 1975-ஆம் ஆண்டு ஹேக் பெண்கள் பள்ளியின் தலைமையாசிரியராகப் பதவி உயர்வு பெற்றார். 1998 கடைசியில் அவர் ஓய்வு பெற்றார்.<br><br>*ஹேக் பெண்கள் பள்ளிக்கு நன்றி.* |

<u>சாத்தியமான அனைத்து வழிகளிலும் கற்றலை மேம்படுத்த முயற்சி</u>

| | |
|---|---|
|  | பள்ளியில் தாங்கள் வளர்த்த முயல்களுடன் ஹேக் பெண்கள் பள்ளி மாணவியர், c. 1981.<br><br>*ஹேக் பெண்கள் பள்ளிக்கு நன்றி.* |

| | |
|---|---|
|  | விதை முளைப்பு மாதிரிப்பொருள் பெட்டி<br>1950<br><br>கல்வி அமைச்சின் மரபுடைமை நிலையத் திரட்டு.<br><br>இந்த மாதிரிப்பொருள் பெட்டியில், சிகப்புக் காராமணி, இந்தியச் சோளமணி, பட்டாணி விதைகளின் முளைப்பு வெவ்வேறு கட்டங்களில் காட்டப்படுகிறது. ஒவ்வொரு கட்டத்திலும் தரைமட்டத்திலிருந்து நாற்றுகள் எவ்வளவு உயரம் வளர்ந்திருந்தன என்பதை விளக்கவரிகள் குறிப்பிடுகின்றன. |



குமாரி பண்டாராவும் (நடுவில் அமர்ந்திருப்பவர்) அவரது தொடக்கநிலை மூன்றாம் வகுப்பு மாணவியரும், 1972.

*ஹேக் பெண்கள் பள்ளிக்கு நன்றி.*

நான் கூடுமானவரை சுவாரசியமான முறையில் பாடம் நடத்த முயற்சி செய்வேன். கற்பிக்க உதவும் துணைப்பொருட்கள் இருந்தால் நன்றாக இருக்கும். அப்படி இல்லாவிட்டால், நானே சொந்தமாக அட்டவணைகளைச் செய்வேன். மாணவர்கள் எண்ணிப்பார்க்க உதவியாக, சக ஆசிரியர்களும் நானும் கற்கள், போத்தல் மூடிகள் மட்டுமன்றி, மஞ்சடி விதைகளைக்கூடச் சேகரிப்போம். மாணவர்கள் தாங்கள் கற்றுக்கொள்வதைப் புரிந்துகொள்ள உதவும்பொருட்டு, சாத்தியமான எல்லா வழிகளையும் பயன்படுத்திப் பார்ப்பேன். அப்போதுதான் அவர்களால் ஞாபகம் வைத்துக்கொள்ள முடியும்.

நான் பூக்கள் பூப்பதையும், மரங்கள் வளர்வதையும், தவளைகள் பிறப்பதையும் பார்த்து வளர்ந்தேன். ஏனெனில், அவை அனைத்தும் சூழ்ந்திருந்த இடத்தில் நான் வாழ்ந்து வந்தேன். ஆனால், என் மாணவர்களில் பெரும்பாலோரால் அதைக் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியாது. அதனால்தான், மாணவர்கள் இவற்றையெல்லாம் சொந்தமாகப் பார்க்கும்வண்ணம், அறிவியல் தோட்டம் அமைக்கும் யோசனையை முன்வைத்தேன். பாட நேரத்தில், மாணவர்களை அங்கு அழைத்துச் சென்று, செடிகள் வளர்வதைப் பார்க்கச் சொல்வேன். முட்டையிலிருந்து கோழிகளும் வாத்துகளும் எவ்வாறு பிறக்கின்றன என்பதை நேரில் பார்ப்பதற்காக, விளக்குக் குமிழ்களைப் பயன்படுத்தி அடைக்காப்பகம் செய்யக் கற்றுக்கொண்டோம்.


எங்கள் பள்ளியில் குளம் இல்லை. அதனால் தவளைக்குஞ்சுகள், தவளைகள், தேரைகள் ஆகியவற்றுக்கு இடையிலான வித்தியாசத்தை மாணவர்களால் பார்க்க முடியவில்லை. நான் என் வீட்டிலிருந்து வீடமைப்பு வளர்ச்சிக் கழக வீட்டுக்கு மாறிச்சென்றபோது எனக்கொரு வாய்ப்பு கிடைத்தது. கட்டடக் கீழ்த்தளத்தில் வீசப்பட்டிருந்த ஒரு பெரிய குளியல்தொட்டி என் கண்ணில் தென்பட்டது. அதைத் தரையில் புதைத்து வைத்தால், அழகிய குளம் கிடைக்கும். பள்ளியின் புத்தகக் கடைக்காரரும் தோட்டக்காரர்களும் வார இறுதியில் எனக்கு உதவி செய்தார்கள். நாங்கள் சுங் செங் உயர்நிலைப் பள்ளியிலிருந்து நீர்ச் செடிகளைச் சேகரித்து, தவளைகளையும் தேரைகளையும் அறிமுகப்படுத்தினோம். இயற்கையான சுற்றுச்சூழலில் உயிரினங்களை நேரில் பார்த்து மாணவர்கள் கற்றுக்கொள்வதைக் காண்பது நல்ல கேளிக்கையாக இருந்தது.

எங்களிடம் முயல்களும் உள்ளன. அவை மாணவர்களின் மனதைக் கொள்ளை கொண்டன. முயல்களில் ஒன்று இறந்துபோனபோது, மாணவர்கள் அழத் தொடங்கினார்கள். அவர்களால் பாடத்தில் கவனம் செலுத்த முடியவில்லை. நான் என்ன செய்யமுடியும்? வகுப்பு முடிந்த பிறகு, முயலை அடக்கம் செய்தேன். மாணவர்கள் நிறைய பூக்கள் எடுத்துவந்து வைத்து, கைக்குட்டைகள் ஈரமாகும் அளவுக்கு அழுது கொண்டே இருந்தார்கள்.



ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் காட்சிக்கு வைக்கப்பட்ட கற்பிக்க உதவும் துணைப்பொருட்கள், 1956.

*தகவல் கலைகள் அமைச்சின் திரட்டு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்திற்கு நன்றி.*

| | |
|---|---|
|   | “அவர்களின் பலத்தைக் கண்டறிந்து, அதை அவர்களது கவனத்திற்குக் கொண்டு வந்து வழிகாட்டும்போது, அவர்கள் சிறந்த மாணவர்களாவார்கள் அல்லது சிறந்த ஆசிரியர்களாவார்கள்.” |

ஒருவருக்கொருவர் உதவுதலும் அக்கறை காட்டுதலும்

சில மாணவர்கள் காலை உணவு உண்ணாமல் பள்ளிக்கு வருவார்கள். நாங்கள் வெந்நீர் கொதிக்க வைத்து, பள்ளிகளுக்கு பெரிய மூட்டைகளில் கொடுக்கப்பட்ட பால் மாவை அதில் கலந்து, கொழுப்புநீக்கிய பாலை அவர்களுக்குக் கொடுப்போம். இடைவேளை நேரத்திற்குப் பிறகு, மாணவர்கள் வடிகால் ஓரத்தில் அமர்ந்து பற்களைத் துலக்குவார்கள். அவர்களது பற்கள் உறுதியாகவும் ஆரோக்கியமாகவும் இருப்பதை உறுதிப்படுத்த, பற்களைச் சரியான முறையில் துலக்கக் கற்றுத் தருவோம்.

ஒருசில பிள்ளைகள், பள்ளிப்படிப்பை முக்கியமாகக் கருதாத குடும்பங்களிலிருந்து வருகிறார்கள். என் மாணவர்களில் சிலர், உணவங்காடிக்கடை நடத்தும் பெற்றோருக்குக் காலையில் உதவி செய்த பிறகு, அவசர அவசரமாகப் பள்ளிக்கு வருவார்கள். ஓய்வெடுக்கவோ வீட்டுப்பாடம் செய்யவோ அவர்களுக்கு நேரம் இருக்காது. நான் அவர்களது பெற்றோரிடம் என்னை வந்து சந்திக்கச்சொல்லி மன்றாடிக் கேட்டுக்கொண்டேன். அவர்களது பிள்ளைகள் குறைந்தபட்சம் தொடக்கப்பள்ளி இறுதித் தேர்வுச் சான்றிதழாவது பெறுவதற்கு ஒருவருக்கொருவர் உதவி செய்வதாக உறுதிமொழி எடுத்துக்கொண்டோம்.

நான் எப்போதுமே திறமையான மாணவர்களைச் சற்று பலவீனமான மாணவர்களைக் கவனித்துக்கொள்ளச் சொல்வேன். ஆரம்பத்தில், அது அவர்களுக்குச் சற்று சிரமமாக இருக்கும். ஏனெனில், தங்களிடம் இருப்பதைப் பிறருடன் பகிர்வதால் தங்களுக்கே இழப்பு என அவர்களுக்குத் தோன்றும். ஆனால், மற்றவர்களுக்குச் சொல்லித் தரும்போது அவர்களும் கற்றுக்கொண்டு தங்கள் திறமையை வளர்த்துக்கொள்வார்கள் என்று எடுத்துச் சொல்வேன். படிப்படியாக, திறமையான மாணவர்கள் மேலும் கற்றுக் கொள்வார்கள், பலவீனமான மாணவர்கள் பின்தங்கிவிடாமல் இருப்பார்கள். ஒரு குழுவாகச் சேர்ந்து முன்னேறும்போது, உயர் தரத்தை நம்மால் நிலைநாட்ட முடியும்.

| | |
|---|---|
| <br> | ஆசிரியர் பணியின் ஆரம்பகால நாட்கள் (02:26)<br>கற்றலுக்கு உயிரூட்டிய அனுபவம் (03:49)<br><br>*ஹேக் பெண்கள் பள்ளிக்கு நன்றி.*<br><br>இவ்விரு காணொளிகளிலும், புதிதாகத் தகுதிபெற்ற ஆசிரியராக ஹேக் பெண்கள் பள்ளியில் சேர்ந்த நாட்களைக் குமாரி பண்டாரா நினைவுகூர்கிறார். தலைமையாசிரியர் திருமதி ஈத்தல் டாரத்தி டெஸ்கரையும், கற்பிக்க உதவும் துணைப்பொருட்களின் பயன்பாட்டையும் அவர் வர்ணிக்கிறார். பழைய குளியல்தொட்டியைப் பயன்படுத்தி சூழலியல் குளம் அமைத்ததையும், அறிவியல் தோட்டத்தில் மாணவர்கள் வளர்த்த முயல் இறந்துபோனபோது மாணவர்களுடன் சேர்ந்து அதை அடக்கம் செய்ததையும் அவர் பகிர்கிறார். |

முன்னேற்றம் அடைதல்

நான் எதையாவது செய்ய நினைத்தால், என்னால் முடிந்தவரை அதைச் சிறப்பாகச் செய்வேன். என் மாணவர்கள், சக ஊழியர்களின் நன்மைக்காக நான் ஒன்றைச் செய்யும்போது, ஒரு சாதனை செய்துவிட்ட உணர்வு எனக்குள் ஏற்படும். எனக்காக அல்ல, மற்றவர்கள் கற்றுக்கொண்டு வளர்ச்சி அடைவதைப் பார்ப்பதற்காக.

எனக்கு மற்றவர்கள் முன்னேற்றம் அடைவதைப் பார்க்கப் பிடிக்கும். அவர்களின் பலத்தைக் கண்டறிந்து, அதை அவர்களது கவனத்திற்குக் கொண்டு வந்து வழிகாட்டும்போது, அவர்கள்


சிறந்த மாணவர்களாவார்கள் அல்லது சிறந்த ஆசிரியர்களாவார்கள். அவர்கள் முயற்சியெடுத்து உழைத்தார்களானால், நான் அவர்களுக்குத் தலைவணங்குவேன்.

| | |
|---|---|
|  | பள்ளி இடைவேளை நேரத்தில் மாணவர்கள் கொழுப்புநீக்கிய பாலைப் பெற்றுக்கொள்கிறார்கள், 1950கள்.<br><br>*தகவல் கலைகள் அமைச்சின் திரட்டு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்திற்கு நன்றி.* |
|  | ஹேக் பெண்கள் பள்ளி மாணவர்கள் இடைவேளை நேரத்திற்குப் பிறகு பற்களைத் துலக்குகின்றனர், c. 1981.<br><br>*ஹேக் பெண்கள் பள்ளிக்கு நன்றி.* |

*இதிலிருந்து எடுக்கப்பட்டது:*
*நந்தா பண்டாராவுடன் வாய்மொழி வரலாற்று நிலையம் நடத்திய பேட்டி, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகம், பதிவெண்: 004583, 2020.*
*நந்தா பண்டாரா, "ஒவ்வொரு பிள்ளையும் சாதிக்க முடியும்",* PSD சவால், *26 நவம்பர் 2014.*
*ஹேக் பெண்கள் பள்ளியின் 70வது ஆண்டு நிறைவு வெளியீடு, 2021.*

**1970கள் - திரு மொக் சக் எங்**

நான் 1976-ஆம் ஆண்டு புக்கிட் பாஞ்சாங் அரசாங்க உயர்நிலைப் பள்ளியின் ஆங்கில மொழிக் கல்விப் பிரிவில் ஆங்கிலமும் புவியியலும் கற்பிக்கும் ஆசிரியராகச் சேர்ந்தேன். பின்னர் 1978-ல், சீன மொழிக் கல்விப் பிரிவுக்கு மாறிச்சென்று இயற்பியலும் கணிதமும் கற்பித்தேன்.



திரு மொக் (1934 - 2005) மலேசியாவின் மூவாரில் பிறந்தவர். அவர் ஜோகூரில் ஆசிரியராகப் பணியாற்றியபின், 1975-ஆம் ஆண்டு சிங்கப்பூரில் குடியேறினார். அவர் 1976-ஆம் ஆண்டு புக்கிட் பாஞ்சாங் அரசாங்க உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராகச் சேர்ந்து, 1991-ல் துணைத் தலைமையாசிரியராக ஓய்வு பெற்றார்.

*புக்கிட் பாஞ்சாங் அரசாங்க உயர்நிலைப் பள்ளிக்கு நன்றி.*

<u>இரண்டிலும் சிறந்தது</u>




புக்கிட் பாஞ்சாங் அரசாங்க உயர்நிலைப் பள்ளி, c. 1970.

*புக்கிட் பாஞ்சாங் அரசாங்க உயர்நிலைப் பள்ளியின் திரட்டு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்திற்கு நன்றி.*

நான் மலேசியாவின் மூவாரில் உள்ள தொடக்கப் பள்ளியில் சீனமொழிக் கல்விப் பிரிவிலும், உயர்நிலைப் பள்ளியில் ஆங்கிலமொழிக் கல்விப் பிரிவிலும் படித்தேன். சீனமொழிக் கல்வியிலிருந்து ஆங்கிலமொழிக் கல்விக்கு மாறியபோது, வரலாறு, புவியியல், இலக்கியம் போன்ற பாடங்கள் எனக்குச் சிரமமாக இருந்தன. சொற்களுக்கு அர்த்தம் தெரிந்துகொள்ள ஆங்கில-சீன அகராதியையே எந்நேரமும் சார்ந்திருந்தேன். என் பாடப்புத்தகங்களில் எங்கு பார்த்தாலும் கையால் மொழிபெயர்த்து எழுதியிருந்தேன்.

நான் முதல்முறையாக புக்கிட் பாஞ்சாங் அரசாங்க உயர்நிலைப் பள்ளிக்கு வந்தபோது, எனக்கு உடனே பிடித்துப்போய்விட்டது. ஆங்கிலமொழி, சீனமொழிக் கல்விப் பிரிவுகள் இரண்டும் ஒருங்கிணைக்கப்பட்டிருந்த சிங்கப்பூரின் முதல் பள்ளி அது. ஆங்கிலம், சீனம் இரண்டுமே பயன்படுத்தப்படுவதாக நான் கேள்விப்பட்ட உடனே, அதுவே எனக்குச் சரியான இடம் என்று நினைத்தேன். அந்தப் பள்ளி நல்லொழுக்கத்திற்குப் பெயர்பெற்றிருந்தது. ஆசிரியர்களும் திறமையானவர்களாக இருந்தனர்.

<u>என் பணியின் கருவிகள்</u>




புக்கிட் பாஞ்சாங் அரசாங்க உயர்நிலைப் பள்ளியின் முதல் பள்ளி நூலகம், 1970கள்.


*புக்கிட் பாஞ்சாங் அரசாங்க உயர்நிலைப் பள்ளிக்கு நன்றி.*

நான் வகுப்பறையில் கறும்பலகையும் சுண்ணக்கட்டியும் பயன்படுத்தினேன். கணிதப் பாடத்திற்கு, மரத்தாலான முக்கோணம், அளவுகோல், கவராயம் ஆகியவற்றைப் பயன்படுத்தி கரும்பலகையில் விளக்கப்படங்கள் வரைவேன். கவராயம் இல்லாமல், வட்டம் வரைவது சிரமம். ஆனால், பல ஆண்டு அனுபவமுள்ள சில ஆசிரியர்களால் கவராயம் இல்லாமல் வட்டம் வரையமுடியும்.

தேர்வுத்தாட்கள் தயார்ப்படுத்துவது எனக்கு மிகுந்த வலியைத் தரும். ஆங்கில மொழியிலான தேர்வுத்தாட்களைத் தட்டச்சு செய்துவிடலாம். ஆனால், சீன மொழியிலான தேர்வுத்தாட்களைக் கையால் காகிதத்தில் எழுதவேண்டும். ஒரு மெழுகுத்தாள் அச்சை ஓர் எவர்சில்வர் சட்டத்தினுள் வைத்து, அதில் எழுதவேண்டும். அதன்பின் அந்த அச்சை படியெடுப்புக் கருவியில் வைத்து, ஒவ்வொரு பிரதியாக அச்சிடவேண்டும்.

பல சமயங்களில், நான் இரவெல்லாம் கையும் கண்களும் வலிக்கும் வரை எழுதுவேன். சில சமயங்களில், நான் எழுதிக் கொண்டிருக்கும்போதே அச்சு கிழிந்துபோகும். அப்போது நான் மறுபடியும் ஆரம்பத்திலிருந்து எழுதவேண்டும்! படியெடுப்புக் கருவியையும் கவனமாகப் பயன்படுத்தவேண்டும் (வேகமாக இயக்க முடியாது!). ஏனெனில், அச்சு கிழிந்துபோகும் அல்லது கருவி பழுதடைந்துவிடும்.

| | |
|---|---|
|   | [இயற்கணித வழிகாட்டி] (முகப்புப்பக்கம்) [சுழலியக்கம் மற்றும் புவி ஈர்ப்பு] (விரிந்த பக்கம்)<br>c. 1960கள் - 1970கள்<br><br>*கல்வி அமைச்சின் மரபுடைமை நிலையத் திரட்டின் மறுபதிப்பு.*<br><br>இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் கணித, இயற்பியல் வழிகாட்டிகள், சீனமொழி கல்விப் பிரிவில் படித்த உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்காக எழுதப்பட்டவை. ஒருங்கிணைந்த தேசியக் கல்விமுறை 1987-ல் நடப்புக்கு வருவதற்குமுன், சிங்கப்பூர் மாணவர்கள் சீனம், மலாய் அல்லது தமிழ் மொழிக் கல்விப் பிரிவுகளில் சேர்ந்து தாய்மொழியில் கல்வி கற்கலாம். |

| | |
|---|---|
|  | "மாணவர்களுக்கு எது புரியவில்லை என்பதை ஒரு கேள்வி காட்டுகிறது. எனவே, எல்லாக் கேள்விகளும் சரியான கேள்விகளே; தவறான கேள்விகள் என எதுவுமில்லை." |

நான் உங்களைப் பார்த்துச் சிரிக்க மாட்டேன்



புக்கிட் பாஞ்சாங் அரசாங்க உயர்நிலைப் பள்ளியின் முதல் சீருடையின் வடிவமைப்பைக் காட்டும் வகுப்புப் புகைப்படம், 1966.

*புக்கிட் பாஞ்சாங் அரசாங்க உயர்நிலைப் பள்ளிக்கு நன்றி.*

என்னைப் பொறுத்தவரை, நல்ல ஆசிரியர்கள் எனக்குத் துணையிருக்கும்போது கற்பது பேரின்பமாக இருக்கும். தொடக்கப் பள்ளியில், சமுதாயத்திற்குப் பெருமளவு பங்களித்த தங்களது ஆசிரியர்களைப் பற்றி எனது ஆசிரியர்கள் கதை கதையாகச் சொல்லியபோது, நானும் முயற்சியெடுத்து நல்லது செய்யவேண்டும் என்ற ஊக்கம் என்னுள் எழுந்தது. என் ஆசிரியர்களின் போதனையின்கீழ், வாழ்க்கையின் விழுமியங்களையும் கோட்பாடுகளையும் நான் கற்றுக்கொண்டேன். நல்ல ஆசிரியர்கள் ஒரு மாணவரின் வாழ்க்கையில் நல்விளைவுகளை உருவாக்குவார்கள் என்று நான் நம்புகிறேன். என் மாணவர்களை ஒருபோதும் கேலி செய்யக்கூடாதென்பதை என் ஆசிரியர்களிடமிருந்து நான் கற்றுக்கொள்ள விரும்புகிறேன்

நான் ஹல் பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருந்தபோது, என் கேள்விகளைக் கேட்டு எனது பேராசிரியர்கள் ஒருநாளும் சிரிக்கவில்லை. அது என் மனதில் ஆழப் பதிந்தது. மாணவர்களுக்கு எது புரியவில்லை என்பதை ஒரு கேள்வி காட்டுகிறது. எனவே, எல்லாக் கேள்விகளும் சரியான கேள்விகளே; தவறான கேள்விகள் என எதுவுமில்லை. நம் மாணவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு நாம் முக்கியத்துவம் அளித்து, அவர்கள் "உதவாக்கரைகள்" அல்லது "முட்டாள்கள்" அல்ல என்பதையும், அவர்களால் அறிவை வளர்த்துக் கொள்ள முடியும் என்பதையும் உணர்த்தவேண்டும்.

என் மாணவர்களிடம் நான் நல்லவிதமாகப் பேசுவேன். அவர்களை நான் ஒருபோதும் கேலி செய்யமாட்டேன் என்று அவர்களிடம் எடுத்துச் சொல்வேன். அவர்கள் அனைவருமே கற்பிக்கப்படக்கூடியவர்கள் என்று நான் நம்புகிறேன். என் மாணவர்களை எல்லாக் காரியங்களிலும் முடிந்தவரை முயற்சி செய்யச்சொல்லி ஊக்கம் கொடுப்பேன். அவர்களால் சரியாகச் செய்ய முடியாமல் போனால், எவர்மீதும் பழி போடக்கூடாதென்று அறிவுரை கூறுவேன்.

கற்பிப்பதற்குச் சிரமமான ஒன்று



புக்கிட் பாஞ்சாங் அரசாங்க உயர்நிலைப் பள்ளியின் புதிய வசதிகளுக்கு நிதி திரட்டுவதற்காக நடத்தப்பட்ட கேளிக்கைச் சந்தை, 1970கள்

*புக்கிட் பாஞ்சாங் அரசாங்க உயர்நிலைப் பள்ளிக்கு நன்றி.*


மாணவர்களுக்கு முழுநிறைவான கல்வி கிடைப்பது முக்கியம். எனவே மாணவர்களின் வளர்ச்சிக்காக, நன்னெறி, அறிவுத்திறன், உடலுறுதி, சமுதாயத்தோடு வாழும் திறன், அழகியல் ஆகியவை உள்ளடங்கிய "வாழ்க்கையின் ஐந்து கூறுகளை" நான் வழிகாட்டியாகப் பயன்படுத்துகிறேன்.

பள்ளிகள் நன்னெறி, சமுதாயத்தோடு வாழும் திறன் போன்ற மற்ற கூறுகளில் போதிய கவனம் செலுத்தாமல், அறிவுத்திறன் வளர்ச்சியில் அளவுக்கதிக கவனம் செலுத்திவிடக்கூடும் என்பது என் கவலை. இப்படிப்பட்ட மாணவர்கள் நம் சமுதாயத்திற்கு எந்தளவுக்குப் பயனுள்ளவர்களாக இருப்பார்கள்?

| | |
|---|---|
|   | கல்விக்கான "வாழ்க்கையின் ஐந்து கூறுகள்" |

நன்னெறிகளை வளர்ப்பதே எனக்கு உண்மையில் சிரமமாக இருக்கிறது. நற்பண்புகளை எப்படிக் கற்பிப்பது? மாணவர்களை நச்சரித்துக்கொண்டே இருக்க முடியாதல்லவா. அதுமட்டுமன்றி, நற்பண்புகளைப் பற்றிப் படித்தறிவோர் அதை நடைமுறையில் பயன்படுத்துவார்கள் என்று அர்த்தமில்லை. நாங்கள் வெற்றிகரமாக நற்பண்புகளைப் புகட்டினோமா என்பதை எப்படி மதிப்பிடுவது? கண்டிப்பாகத் தேர்வுகளின் மூலம் அல்ல. ஓர் ஆசிரியராக, என் உள்ளத்திலிருக்கும் இந்தக் கேள்விகளைப் பற்றி நான் அடிக்கடி சிந்தித்துப் பார்ப்பேன்.

| | |
|---|---|
|  | படியெடுப்புக் கருவி<br>c. 1960கள் - 1970கள்<br><br>*கல்வி அமைச்சின் மரபுடைமை நிலையத் திரட்டின் மறுபதிப்பு.*<br><br>கைப்பிடியைத் திருகுங்கள். உங்களுக்காக ஓர் ஆச்சரியம் காத்திருக்கிறது!<br><br>நகலெடுக்கும் இயந்திரங்கள் (photocopiers) கண்டுபிடிக்கப் படுவதற்குமுன், ஆவணங்களைப் படியெடுக்க படியெடுப்புக் கருவிகள் (cyclostyles) பயன்படுத்தப்பட்டன. கருவியின் உருளைமீது மெழுகுத்தாள் வார்ப்பச்சு சுருட்டி வைக்கப்படும். கைப்பிடியைத் திருகி உருளையை உருட்டும்போது, வார்ப்பச்சின் வாயிலாக வெளியாகும் மை, காகிதத்தில் அச்சிடும். |




பள்ளியைப் பற்றிய உங்கள் நினைவலைகள் என்ன?

இந்தக் காகிதத்தில் உள்ள புள்ளிக் கோடுகளுக்கு ஏற்ப மடித்திடுங்கள். ஒரு நண்பரிடம் 1 முதல் 8 வரையிலான எண்களில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கச் சொல்லுங்கள். அவர் தேர்ந்தெடுக்கும் எண்ணுக்கான உங்கள் பதிலைப் பகிருங்கள். இதேபோல் ஒவ்வொருவராக மாறிமாறிச் செய்து விளையாடி மகிழுங்கள்!

1) உங்கள் பள்ளியின் பாடல் எப்படிப்பட்டது? அதைப் பாடிக் காட்டுங்கள்!

2) பள்ளியில் உங்களுக்கு மிகவும் பிடித்த இடம் எது? அது ஏன்?

3) உங்களால் மறக்க முடியாத ஓர் ஆசிரியரைப் பற்றி கூறுங்கள். அவரிடமிருந்த மறக்க முடியாத தன்மை என்ன?

4) பள்ளியில் நீங்கள் “பிரச்சனையில்” மாட்டியதுண்டா? என்ன நடந்தது?

5) உங்கள் வகுப்பறையைப் பற்றி உங்களுக்கு என்ன நினைவிருக்கிறது?

6) பள்ளியில் உங்களுக்குப் பிடித்த கொண்டாட்ட நிகழ்வு எது? அது ஏன்?

7) உங்கள் பள்ளிச் சீருடையைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? எந்தப் பள்ளியின் சீருடை உங்களுக்கு மிகவும் பிடித்திருந்தது?

8) பள்ளியில் உங்களுக்கு மிகவும் பிடித்தமானது என்ன? அவ்வளவாகப் பிடிக்காதது என்ன?

*இதிலிருந்து எடுக்கப்பட்டது:*
*மொக் சக் எங்குடன் வாய்மொழி வரலாற்று நிலையம் நடத்திய பேட்டி, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகம், பதிவெண்: 001998, 1998.*

**1980கள் - திரு ருடால்ஃப் வில்லியம் மொஸ்பர்கன்**

நான் புதிதாகத் தொடங்கப்பட்ட ராஃபிள்ஸ் தொடக்கக் கல்லூரியின் தலைமையாசிரியர். எங்கள் கல்லூரி மூன்று ஆண்டுகளுக்குமுன் செயல்படத் தொடங்கியதிலிருந்து, இரு இடமாற்றங்களையும் பற்பல சவால்களையும் நாங்கள் கடந்து வந்திருக்கிறோம்.



திரு மொஸ்பர்கன் (1929 - 2015) தமது ஆசிரியர் பணியை 1955-ல் தொடங்கினார். அவர் 1965-லிருந்து பல்வேறு உயர்நிலைப் பள்ளிகளில் தலைமையாசிரியராகப் பொறுப்பேற்றிருந்தார். கல்வி அமைச்சின் தலைமையகத்திலும், கல்விக் கழகத்திலும் சில காலம் பணியாற்றிய பின், 1982 முதல் 1987 வரை ராஃபிள்ஸ் தொடக்கக் கல்லூரியின் முதல் தலைமையாசிரியராக நியமிக்கப்பட்டார்.

*நேவல் பேஸ் உயர்நிலைப் பள்ளிக்கு நன்றி.*

<u>இக்கட்டான சூழல்</u>

ராஃபிள்ஸ் தொடக்கக் கல்லூரி, கிரேஞ்ச் சாலையில் இருந்த ராஃபிள்ஸ் கல்விக் கழகத்தின் புகுமுக வகுப்பு மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களோடும், புதிய மாணவர்களோடும் 1982-ஆம் ஆண்டு செயல்படத் தொடங்கியது. கல்லூரியை நடத்துவது கயிற்றில் நடப்பதுபோல் இக்கட்டான சூழலாக இருந்தது. கல்விக் கழகம் முன்பு பயன்படுத்திய பேட்டர்சன் சாலை வளாகம் எங்களது தேவைகளுக்குப் போதுமானதாக இல்லை. முதல் ஆண்டில், கல்லூரியின் அறிவியல் மாணவர்கள், அறிவியல் ஆய்வுக்கூடப் பாடங்களுக்காக ராஃபிள்ஸ் கல்விக் கழகத்திற்குத் திரும்பிச் செல்ல வேண்டியிருந்தது. மழை பெய்யும் பிற்பகல் நேரங்களில் எவ்வளவு போராட்டமாக இருந்திருக்கும் என்பதை நீங்களே கற்பனை செய்து பாருங்கள்.

அந்தக் காலகட்டத்தில், தேர்வுக்குத் தயார்ப்படுத்தும் மாணவர்களுக்காக இருவேறு முறைகளில் பாடம் நடத்தினோம். விரிவுரை-துணைப்பாடம் மற்றும் வகுப்பறைப் பாடம் ஆகியவை அவை. ஒரு தொடக்கக் கல்லூரியாக மாறும் அதே வேளையில், மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் நலனையும் நாங்கள் பாதுகாக்க வேண்டியிருந்தது.

அந்த ஆரம்பகால ஆண்டுகளில், துணிவையும் விடாமுயற்சியையும் தவிர கிட்டத்தட்ட எல்லாவற்றிலும் பற்றாக்குறை நிலவியது. கல்லூரியின் வாராந்தரக் கூட்டங்களின்போது, மாணவர்களால் கண்டிப்பாகத் தாக்குப்பிடித்து சாதிக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கிருப்பதாகச் சொல்லி, மாணவர்களுக்கு ஊக்கம் கொடுத்தேன். “சாத்தியமல்லாதவற்றை நாம் உடனடியாகச் செய்வோம்; அதிசயங்களுக்குச் சற்றே கூடுதல் காலமெடுக்கும்” என்பது எங்களின் முழக்கவரியாக இருந்தது. அது நற்பலன் அளித்தது. நாங்கள் ஒன்றுசேர்ந்து விரைவாகப் பிரச்சனைகளைக் கடந்து சென்றோம்.

நாங்கள் விரைவில் இரண்டாவது முறையாக இடம் மாறவேண்டியிருக்கும் என நாங்கள் நினைக்கவே இல்லை. ராஃபிள்ஸ் தொடக்கக் கல்லூரி 1983-ன் பிற்பகுதிக்குள் மவுண்ட் சினாயில் புதிய வளாகத்திற்கு மாறப்போவதாக எங்களுக்குத் தகவல் கிடைத்தபோது, மாணவர்கள் பலருக்கும் மகிழ்ச்சியில்லை. தாங்கள் இங்கும் அங்கும் தள்ளப்படுவதாகவும், ஒரு பிள்ளையைப் பெற்றோரிடமிருந்து பிரிப்பதுபோல் ராஃபிள்ஸ் தொடக்கக் கல்லூரிக்கும் ராஃபிள்ஸ் கல்விக் கழகத்திற்கும் இடையிலான தொப்புள்கொடி வெட்டப்படுவதாகவும் அவர்கள் நினைத்தனர். கிட்டத்தட்ட எல்லா மாணவர்களும் - மொத்தமாக ஆயிரத்து நானூறு மாணவர்கள் - இடமாற்றத்திற்கு எதிரான மனுவில் கையெழுத்திட்டனர். கல்வித் துணை அமைச்சர் டாக்டர் டே எங் சூன் அவர்களும் நானும் பெருமுயற்சி எடுத்து, இடமாற்றத்தின்

அவசியத்தையும் நன்மைகளையும் மாணவர்களுக்குப் புரிய வைத்தோம். அதன்பிறகு, ராஃபிள்ஸ் தொடக்கக் கல்லூரி முழுமூச்சாக முன்னேற்றப் பாதையில் பீடுநடை போட்டது.

<u>சவால்களை எதிர்கொள்ளுதல்</u>



மாற்றங்கள் பெரிய தொந்தரவாக இருக்கலாம். ஆனால், ஆசிரியர்கள் அந்த மாற்றங்களை நிறைவேற்றுபவர்களாக இருப்பது அவசியம். மாணவர்கள் கற்றுக்கொள்ளத் துணைபுரியும் ஆசிரியர்கள்தான் முதலில் கற்றுக்கொள்கிறார்கள். அதனால்தான், ஒவ்வொரு பணியையும் ஒரு சவாலாகக் கருதி எதிர்கொள்ளுமாறு ஆசிரியர்களிடம் திரும்பத்திரும்பச் சொல்கிறேன். ஒரு நோக்கத்தையும் சாதனை உணர்வையும் தரும் அந்தச் சவால்களை, அவர்கள் விரைவில் விரும்பத் தொடங்கிவிடுவார்கள்.

| | |
|---|---|
|  | பேட்டர்சன் சாலை வளாகத்திலிருந்து ராஃபிள்ஸ் தொடக்கக் கல்லூரி இடம் மாறிச்சென்றபோது ஆசிரியர்களும் மாணவர்களும் மேசைகளைத் தூக்கிச் செல்கின்றனர், 1983.<br><br>*ராஃபிள்ஸ் கல்விக் கழகத்திற்கு நன்றி.* |

எனக்கு நெருக்குதலாக இருக்கிறதா? என்னைக் கேட்டால், “சவால்” என்ற சொல்லையே நான் விரும்புவதாகச் சொல்வேன். நீங்கள் ஒரு சவாலை எதிர்நோக்கும்போது, அதை ஆராய்ந்து, திட்டமிட்டு, அதனைக் கடந்துசெல்லத் தீர்வு காண்பீர்கள். ஏமாற்றம் என்பது தற்காலிகமான பின்னடைவுதான். அது அந்தச் சவாலை மேலும் கவனமாக ஆராயத் தூண்டும். “நெருக்குதல்” என்பது நாமே நமக்கு ஏற்படுத்திக்கொள்வது. உங்கள் மீதான நெருக்குதலில் பாதியை நீங்களே உங்கள்மீது சுமத்திக் கொள்கிறீர்கள் எனலாம்.

சவால்களை எதிர்கொள்வது எனக்கு ஒரு சிறந்த வெகுமதி என்பேன். அந்தச் சாதனை தனிப்பட்டது மட்டுமல்ல, கூட்டானதும்கூட. அது என் பணியில் எனக்கு மனநிறைவைத் தருகிறது.

| | |
|---|---|
|  | திரு மொஸ்பர்கன் பள்ளிப் பியானோ வாசிக்கிறார், 1982 - 1983.<br><br>அவர் *“Rafflesians Salute Your Alma Mater”* என்ற பாடலையும், நேவல் பேஸ் உயர்நிலைப் பள்ளி, பாசிர் பாஞ்சாங் உயர்நிலைப் பள்ளி, சுவிஸ் காட்டேஜ் உயர்நிலைப் பள்ளி ஆகியவற்றின் பள்ளிப் பாடல்களையும் எழுதினார். அப்பள்ளிகளிலும் அவர் தலைமையாசிரியராகப் பணியாற்றி இருக்கிறார்.<br><br>*ராஃபிள்ஸ் கல்விக் கழகத்திற்கு நன்றி.* |

| | |
|---|---|
|  | பேட்டர்சன் சாலையில் அமைந்திருந்த ரா∴பிள்ஸ் தொடக்கக் கல்லூரி, 1982 - 1983.<br><br>*ரா∴பிள்ஸ் கல்விக் கழகத்திற்கு நன்றி.* |
|  | மவுண்ட் சினாயில் அமைந்திருந்த ரா∴பிள்ஸ் தொடக்கக் கல்லூரி, 1984 - 1985.<br><br>*ரா∴பிள்ஸ் கல்விக் கழகத்திற்கு நன்றி.* |

<u>உன்னதநிலையை அடையும் உணர்வு</u>

மாணவர்கள் அனைவரும் தங்கள் எல்லைகளை விரிவுபடுத்திக் கொள்ளவும், கல்வி, நன்னெறி, உடலுறுதி ஆகிய ஆற்றல்களை வளர்த்துக்கொள்ளவும் வாய்ப்பளிக்கப்பட வேண்டும் என்பதே கல்லூரியை நடத்துவதில் நான் கடைப்பிடிக்கும் கொள்கை. முழுநிறைவான வளர்ச்சி மிகவும் முக்கியம். அதனால், மாணவர்கள் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்த, ஒவ்வோர் ஆண்டும் கலைவிழாவும் நாடக விழாவும் நடத்துவது அவசியமென்று நானும் என் ஆசிரியர்களும் கருதுகிறோம். இதற்குக் கூடுதல் உழைப்பு, முயற்சி, நேரம் தேவை. ஆனால், விழா தரமாக அரங்கேறி முடிவடையும்போது, மனத்திருப்தி ஏற்படும். அதுதான் உன்னதநிலையை அடையும் உணர்வு என்பேன்.


நாம் உன்னதநிலையை அடைவது எப்படி? கடின உழைப்பு ஒன்றே வழி. இதற்கு வேறு வழிகள் கிடையாது. விட்டுக்கொடுத்து தியாகங்கள் செய்துதான் ஆகவேண்டும்.

| | |
|---|---|
| <br> | ரா∴பிள்ஸ் தொடக்கக் கல்லூரியின் கலைவிழாக் காட்சிகள், 1982 மற்றும் 1985.<br><br>*ரா∴பிள்ஸ் கல்விக் கழகத்திற்கு நன்றி.* |

ஒரு நல்ல ஆசிரியரின் தன்மைகள் என்ன?

ஒரு நல்ல ஆசிரியருக்குப் பல்வேறு தன்மைகள் இருக்கலாம். அவற்றுள் ஆக முக்கியமானதாக நான் கருதுவது மனிதநேயப் பண்புகள் - அவைதான் அக்கறை, அன்பு, புரிந்துணர்வு, பிறருடன் பகிரும் விருப்பம், உதவி தேவைப்படுவோர்மீது அதீத அக்கறை. ஓர் ஆசிரியர் மாணவர்களுக்கு முன்மாதிரியானவர். நீங்கள் முன்மாதிரியாக இருந்தால், வேறு எதனை விடவும் அதுவே சிறந்த எடுத்துக்காட்டு.

| | |
|---|---|
|  | பள்ளிக் கட்டடங்களின் வடிவமைப்பும் வசதிகளும் 1950களிலிருந்து இன்று பெரிதும் மாற்றமடைந்துள்ளன.<br><br>இந்த மடிக்கும் நடவடிக்கையில் பங்கெடுத்து, 1960களின் "H" வடிவத் தொடக்கப் பள்ளி வடிவமைப்பை மீண்டும் உருவாக்கிப் பாருங்கள்! |

| | |
|---|---|
|  | ஆசிரியர்கள் மாற்றங்களை நிறைவேற்றுபவர்களாக இருப்பது அவசியம். மாணவர்கள் கற்றுக்கொள்ளத் துணைபுரியும் ஆசிரியர்கள்தான் முதலில் கற்றுக்கொள்கிறார்கள். |

*இதிலிருந்து எடுக்கப்பட்டது:*
*ரூடி (ருடால்ஃப்) வில்லியம் மொஸ்பர்கனுடன் வாய்மொழி வரலாற்று நிலையம் நடத்திய பேட்டி, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகம், பதிவெண்: 000510, 1994 - 1995.*
*ராஃபிள்ஸ் தொடக்கக் கல்லூரி, த ரஃப்லீஷியன்* 1984 - 1985.

**<u>1990கள் - குமாரி டான் சியோக் செங்</u>**




“நான் செய்தவை எதுவுமே வீண்போகவில்லை.”

நான் கல்வித் தொழில்நுட்பப் பிரிவில் அதிகாரியாக இருக்கிறேன். கல்வியில் தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதற்கான சிங்கப்பூரின் முதல் பெருந்திட்டத்தை அமல்படுத்த 1997-ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட ஒரு புதிய பிரிவு இது.



குமாரி டான் (1947 -), செயின்ட் ஜோசப்ஸ் கல்விக் கழகத்தில் உயிரியல் ஆசிரியராக 1970-ஆம் ஆண்டு தமது வாழ்க்கைத்தொழிலைத் தொடங்கினார். அவர் 1980களிலும் 1990களிலும் கல்வி அமைச்சுத் தலைமையகத்தில் பணியாற்றியபின், தலைமையாசிரியராகப் பொறுப்பேற்று, 2009-ல் ஓய்வு பெற்றார்.

*ரா.ஃபிள்ஸ் பெண்கள் தொடக்கப் பள்ளிக்கு நன்றி.*

<u>தகவல் தொழில்நுட்பமும் அதிலுள்ள “என்னவாகும்?” கேள்விகளும்</u>

தகவல் தொழில்நுட்பப் பயிற்சிப் பிரிவைச் சேர்ந்த என் குழுவினர், வகுப்புப் பாடங்களில் தகவல் தொழில்நுட்பத்தை ஒருங்கிணைத்து மதிப்பைக் கூட்ட தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கின்றனர். கற்றலையும் கற்பித்தலையும் மேம்படுத்தக்கூடிய பலதரப்பட்ட மென்பொருட்களை நாங்கள் ஆய்வு செய்கிறோம்.



விக்டோரியா பள்ளியின் கணினிப் பாட வகுப்பு, 1986.

*தகவல் கலைகள் அமைச்சின் திரட்டு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்திற்கு நன்றி.*


சில ஆசிரியர்கள் தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தத் தயக்கம் காட்டுவது ஏன் என்பது எனக்குப் புரிகிறது. சாதனங்கள் சரியாக இயங்காவிட்டால் என்ன செய்வது? தாங்களே தகவல் தொழில்நுட்பத்தை இன்னும் முழுமையாகப் பழகாதபோது, அதைப் பயன்படுத்தி எப்படிப் பாடம் கற்பிப்பது? அதுமட்டுமா, மாணவர்கள் தகவல் தொழில்நுட்பத்தில் அதிக வேகமாகவும் திறமையாகவும் இருக்கிறார்கள். அதனால்தான், எங்களது பயிற்சிப் பாடத்திட்டத்தில் வகுப்பறை நிர்வாகத் திறன்களையும் தீர்வுகாணும் வழிமுறைகளையும் அதிகமாக உள்ளடக்கி இருக்கிறோம். வகுப்பறையில் தகவல் தொழில்நுட்பத்திற்குள்ள மதிப்பைப் பற்றி ஆசிரியர்களுக்குப் புரிய வைக்க காலமாகும்.


அவர்களைப் போலவே, நானும் தகவல் தொழில்நுட்பத்தைப் பழகிக்கொள்ளச் சிரமப்பட்டேன். சென்ற ஆண்டு கல்வித் தொழில்நுட்பப் பிரிவில் சேர்வதற்குமுன், எனக்கு மின்னஞ்சல்கூட அனுப்பத் தெரியாது! நான் பழக்கமில்லாத ஒரு துறையில் தட்டுத்தடுமாறினேன். அதுவரை நான் செய்திராத பலவற்றையும் செய்தேன். இப்போது எனது இரண்டாம் ஆண்டில், இந்தத் துறையில் என்னை நிலைநிறுத்திக்கொண்டு, என் பணியை விருப்பத்துடன் செய்கிறேன். தகவல் தொழில்நுட்பத்தில் வல்லமை இல்லாத நான் ஏன் கல்வித் தொழில்நுட்பப் பிரிவில் இருக்கிறேன்? கற்பிக்கும் கலையில் எனக்குள்ள திறனே அதற்குக் காரணம் என என்னிடம் கூறினார்கள். தகவல் தொழில்நுட்பத்தைக் கற்பிக்கும் கலையுடன் ஒருங்கிணைத்து பயன்மிக்கதாக்குவதே இப்பிரிவின் இலக்கு.

<u>குறைந்தபட்ச சொற்கள், அதிகபட்ச நல்விளைவு</u>

நான் கற்பிக்கும் கலையைப் பற்றி அடிக்கடி சிந்திப்பேன். முன்பு நான் சிங்கப்பூர் பாடத்திட்ட மேம்பாட்டுக் கழகத்தில் உயிரியல் நிபுணத்துவ எழுத்தாளராக இருந்தபோது, உயர்நிலைப் பள்ளியின் கீழ்நிலை வகுப்புகளுக்கான வழக்கநிலை (கல்விப்பிரிவு) அறிவியல் பாடப்புத்தகங்களும் வழக்கநிலை (தொழில்நுட்பப்பிரிவு) பாடப்புத்தகங்களும் எழுதும் பணி எனக்களிக்கப்பட்டது. வழக்கநிலைப் பாடத்திட்டம் சிங்கப்பூரின் தனித்துவம். இதற்கு ஒப்பீடு பெற வெளிநாட்டுப் பாடத்திட்டங்கள் எதுவும் இல்லை. நான் என்னால் முடிந்தவரை எளிமையாக எழுதினேன். அதோடு, கூடுமானவரை மாணவர்கள் செய்து பார்க்கக்கூடிய நடவடிக்கைகளையும் உள்ளடக்கினேன். நான் பல ஆண்டுகாலம் ஆசிரியராக இருந்ததால், நான் சொல்லித்தந்த பாடங்கள் எனக்கு மிகவும் பழக்கப்பட்டிருந்தன. மாணவர்களின் கேள்விகளையும் பிரச்சனைகளையும் என்னால் ஊகிக்க முடிந்ததால், கற்றலை அவர்களுக்கு எளிதாக்கும் வழிமுறையும் எனக்குத் தெரிந்திருந்தது.

பாடப்புத்தகங்கள் எழுதுவதற்குப் பின்னணியில் என்னவெல்லாம் நடக்கிறது? நான் நிறையப் புத்தகங்களிலிருந்தும் மனிதர்களிடமும் ஆலோசனை பெறுவேன். புகைப்படங்கள் தேடி எடுப்பேன். சம்பந்தப்பட்ட இடங்களுக்கு நேரில் சென்று பார்ப்பேன். என் குழுவிலுள்ள ஒருவர் போதைப்பொருள் பற்றி ஓர் அத்தியாயம் எழுதியபோது, சிறை அதிகாரிகளுடன் பேசுவதற்காக சிறைச்சாலைக்குச் சென்றார். யாருடைய மனதையும் புண்படுத்தாதிருக்க, குறிப்பிட்ட சொற்களை மட்டுமே நாங்கள் பயன்படுத்த வேண்டியிருந்தது. பிரச்சனையாகக்கூடும் என நாங்கள் கருதிய தலைப்புகளுக்கு, என் குழுவினர் பள்ளிகளில் முன்னோட்ட வகுப்புகளை நடத்தினார்கள். அதன்பின், பாடப்புத்தகத்தைக் கூர்ந்து ஆராய்ந்து, மறுஆய்வு செய்து, பலமுறை திருத்தம் செய்வோம் (ஆறு முதல் எட்டுத் தடவைகூட!). அதற்குப் பிறகே பாடப்புத்தகம் வெளியீட்டாளரின் கைக்குக் கிடைக்கும். அதிலும் மேற்கொண்டு திருத்தங்கள் செய்யப்படும்.

| | |
|---|---|
|  | *அறிவியலைக் கண்டறிவோம்:*<br>*வாழ்க்கைப் பின்னல்,* 1969 (04:00)<br>*கடல் வாழ்க்கை*, 1980கள் (03:02)<br>***இனிய இல்லம்***, 1996 (02:14)<br><br>சிங்கப்பூர் பாடத்திட்ட மேம்பாட்டுக் கழகத் திரட்டு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்திற்கு நன்றி. |

| | |
|---|---|
|    | 1960கள் முதல் 1990கள் வரை காணொளிகளின் வடிவிலான கல்வித் தொழில்நுட்பத்தின் உருமாற்றத்தைக் காட்டும் இந்தக் காணொளிகளைப் பாருங்கள்!<br><br>உயர்நிலை இரண்டாம் வகுப்பு மாணவர்களுக்கான *அறிவியலைக் கண்டறிவோம்: வாழ்க்கைப் பின்னல்* காணொளி, வெவ்வேறு வகையான உயிரினங்கள் ஒன்றையொன்று எவ்வாறு சார்ந்துள்ளன, எவ்வாறு பாதிக்கின்றன என்பதை விளக்குகிறது.<br><br>*கடல் வாழ்க்கை* காணொளி, கடலிலும் பவளப்பாறைகளிலும் வாழும் பல்வேறு வகையான உயிரினங்களை உயர்நிலை ஒன்றாம் வகுப்பு மாணவர்களுக்கு அறிமுகப்படுத்துகிறது.<br><br>*இனிய இல்லம்* காணொளி, உயர்நிலை 4 வழக்கநிலை (தொழில்நுட்பப் பிரிவு) மாணவர்களுக்கான ஆங்கிலப் பாடத்தின் ஒரு பகுதியாகும். மக்களுக்கு தங்கள் இல்லத்தின்மீதுள்ள பெருமையை மாணவர்கள் கலந்து பேசுவதற்காக இந்தக் காணொளி தயாரிக்கப்பட்டது. |

<u>எப்போதும் கற்கிறோம், எப்போதும் மாறுகிறோம்</u>

பாடத்திட்டம் ஒரு முடிவில்லாமல் தொடரும் பணியைப் போன்றது. ஒவ்வொரு எட்டு முதல் பத்து ஆண்டுகளுக்கு ஒருமுறை, மாறிவரும் காலத்திற்கு ஏற்ப பாடப்புத்தகங்களையும் கற்றலுக்குத் துணைபுரியும் பொருட்களையும் திருத்தும் சிரமமான பணியை நாங்கள் மீண்டும் செய்வோம். பற்பல அறிவாற்றல்கள், நாம் கற்கும் முறை ஆகியன குறித்து மூளையை அடிப்படையாகக் கொண்ட புதிய ஆய்வின் கண்டுபிடிப்புக்கு ஏற்ப, என் குழுவினரும் நானும் ஒன்றுகூடி, தற்போதைய கற்பித்தல் அணுகுமுறைகளைப் பயன்படுத்தி பொருட்களை எவ்வாறு வடிவமைப்பது என்பது பற்றி கலந்து பேசினோம். ஆராய்ச்சிகள் செய்தல், கவனித்தல், விவரங்களை ஒருங்கிணைத்து பதிவு செய்தல், அனுமானித்தல், கருத்துகளைப் பரிமாறிக் கொள்ளுதல் போன்ற செயலியக்கத் திறன்களை அறிவியல் பாடத்திட்டத்தில் உள்ளடக்கினோம்.


நான் செய்தவை எதுவுமே வீண்போகவில்லை



தனது உயர்நிலை நான்காம் வகுப்பு மாணவர்களுடன் குமாரி டான் சியோக் செங் (நடுவில் அமர்ந்திருப்பவர்), 1977.

செயின்ட் ஜோசப்ஸ் கல்விக் கழகத்திற்கு நன்றி.

நான் தலைமையகத்தில் நெடுங்காலம் பணியாற்றுவேன் என்று நான் நினைக்கவில்லை. நான் பத்தாண்டுகளுக்குமேல் ஆசிரியராகப் பணிபுரிந்த செயின்ட் ஜோசப்ஸ் கல்விக் கழகத்திலிருந்து வெளியாகி, 1983-ல் சிங்கப்பூர் பாடத்திட்ட மேம்பாட்டுக் கழகத்தில் முதன்முதலில் சேர்ந்தபோது, திரும்பி வந்துவிடுவேன் என்று தலைமையாசிரியரிடம் சொல்லிவிட்டுச் சென்றேன். மாணவர்களுக்குப் பாடம் கற்பிப்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சி அளித்தது. அவர்கள் நகைச்சுவை உணர்வு மிக்கவர்கள். நான் கண்டிப்பான ஆசிரியராக இருந்ததால், நான் செய்த சில காரியங்கள் என் மாணவர்களைக் கோபப்படுத்தின. ஆனால், அவர்கள் பெற்றோரான பிறகு அல்லது ஆசிரியர்களாகவும் ஆன பிறகு, நான் ஏன் அவ்வாறு செய்தேன் என்பதைப் புரிந்துகொண்டு, தவறைச் சுட்டிக்காட்டி சரியானதைக் கற்றுத் தந்ததற்கு நன்றி சொன்னார்கள். ஓர் ஆசிரியருக்குக் கிடைக்கக்கூடிய சிறந்த வெகுமதி இதுவே.






*உயர்நிலை மூன்றாம் வகுப்புக்கான வழக்கநிலை (கல்விப்பிரிவு) வேதியியல்* (முகப்புப்பக்கம்)
*அறிவியல் - உயர்நிலைப் பள்ளி கீழ்நிலை வகுப்புக்கான வழக்கநிலை (தொழில்நுட்பப் பிரிவு) பாடத்திட்டம்* (விரிந்த பக்கம்)
1996

*கல்வி அமைச்சின் மரபுடைமை நிலையத் திரட்டின் மறுபதிப்பு.*

குமாரி டான் சியோக் செங் 1990களில் வழிநடத்திய குழுவினரால் தயாரிக்கப்பட்ட கற்பிக்கத் துணைபுரியும் பொருட்கள் இவை.

*இதிலிருந்து எடுக்கப்பட்டது:*
*டான் சியோக் செங்குடன் வாய்மொழி வரலாற்று நிலையம் நடத்திய பேட்டி, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகம், பதிவெண்: 003812, 2013 - 2014*

**2000கள் - திருமதி ஷரிஃபா மஸ்தூரா ஷாஹாப்-யோக்கோயாமா**

நான் ரெய்ன்போ நிலையம் - பாலஸ்தியர் சிறப்புப் பள்ளியின் திட்டப்பிரிவுத் தலைவராக இருக்கிறேன். என் கவனிப்பின்கீழ் 40-க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் உள்ளனர். எனது சக ஆசிரியர்களும் நானும், தொடர்புத்திறன் குறைபாடு, பற்பல இயலாமைகள் போன்ற மிதமானது முதல் கடுமையான சிறப்புக் கல்வித் தேவைகள் உள்ள 7 முதல் 12 வயதுள்ள மாணவர்களுக்குப் பாடம் கற்பிக்கிறோம்.



ஆசிரியர் ஷா (1965 - ), புதிதாகத் தொடங்கப்பட்ட மார்கரட் டிரைவ் சிறப்புப் பள்ளியில் 1987-ஆம் ஆண்டு சேர்ந்தார். 2000-ஆம் ஆண்டுகளில், அவர் தலைமை ஆசிரியராகவும், அதன்பின் பாலஸ்தியர் சிறப்புப் பள்ளியில் (இப்போது ரெய்ன்போ நிலையம் - யீஷூன் பார்க் பள்ளி எனப் பெயர் மாறியுள்ளது) திட்டப்பிரிவுத் தலைவராகவும் பணியாற்றினார். இன்று, அவர் ரெய்ன்போ நிலையப் பயிற்சி ஆலோசனை நிலையத்தின் தலைமைப் பயிற்றுவிப்பாளராக, ஆரம்பநிலை ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிப்பதிலும், அவர்களுக்கு ஆற்றலளிப்பதிலும், மற்றும் இயலாமைகள் உள்ளவர்களைப் பற்றிய விழிப்புணர்வை வளர்ப்பதிலும், உள்ளடக்குவதிலும் கவனம் செலுத்தி வருகிறார்.

*ஷரிஃபா மஸ்தூரா ஷாஹாப்-யோக்கோயாமாவுக்கு நன்றி.*

வியப்பிலாழும் உணர்வு

நான் 1987-ல் இருந்து சிறப்புக் கல்வி (SPED) ஆசிரியராக இருந்து வருகிறேன். நான் சிறப்புப் பள்ளியில் நேர்காணலுக்குச் செல்வதாக என் அப்பாவிடம் முதன்முதலில் சொன்னபோது, "நீ தயாராக இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. தைரியமானவர்களால் மட்டுமே சிறப்புக் கல்வித் துறையில் கற்பிக்க முடியும்," என்று சொன்னார். வேலைக்குச் சேர்ந்து மூன்றாம் நாளே, அவர் சொன்னது உண்மை என்பதை ஒப்புக்கொண்டேன். அது எளிதான பணியல்ல. ஏனெனில், எங்கள் மாணவர்களுக்கு மாறுபட்ட தேவைகளும் சவால்களும் இருக்கின்றன. அதுமட்டுமன்றி, கற்பதற்கு இடையூறான பல்வேறு நடத்தைகளும் அவர்களிடமிருந்து வெளிப்படுகின்றன.



ஒரு மாணவருக்கு நடத்தும் தனிப்பட்ட வகுப்பில் பல்வேறு பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன, 2000-ஆம் ஆண்டுகள்.

*ஷரி்ஃபா மஸ்தூரா ஷாஹாப்-யோக்கோயாமாவுக்கு நன்றி.*

சிறப்புக் கல்வி ஆசிரியர்கள் என்ற முறையில், ஒவ்வொரு மாணவருக்கும் தனிப்பட்ட கல்வித் திட்டத்தைக் கவனமாக வடிவமைப்போம். மாணவர்களின் அன்றாட வழக்கங்களைக் கண்டறிந்து, அதற்குத் தேவையான திறன்களை வளர்ப்போம். மாணவர்களிடம் பேசுவதிலும் தனிப்பட்ட வழிமுறைகளைக் கையாளவேண்டும் - சில மாணவர்கள் படங்களை, கருத்துப்பகிர்வு அட்டைகளை அல்லது ஐபேட் சாதனங்களைப் பயன்படுத்தி மனதில் இருப்பதை வெளிப்படுத்துவார்கள். நாங்கள் கற்பிப்பதும், கற்பிக்கும் முறையும் மாணவரை மையமாகக் கொண்டிருப்பது அவசியம். இதுதான் சிறப்புக் கல்வி வகுப்பின் “அறிவியல்”. இதனால்தான் சிறப்புக் கல்வி புத்தாக்கமிக்கதாகவும், விறுவிறுப்பானதாகவும், அர்த்தமுள்ளதாகவும் இருக்கிறது.



பாலஸ்தியர் சிறப்புப் பள்ளிக்கு வரும் மாணவர்களைக் கவர்வதற்காக உருவாக்கப்பட்ட வரவேற்பிடம், 2000-ஆம் ஆண்டுகள்.

*ஷரி்ஃபா மஸ்தூரா ஷாஹாப்-யோக்கோயாமாவுக்கு நன்றி.*

நான் பாடங்களைத் திட்டமிடும்போது, “வகுப்பில் வியப்பிலாழும் உணர்வை எவ்வாறு உண்டாக்குவது? என் மாணவர்களின் ஆர்வத்தை எப்படித் தூண்டுவது?” என என்னிடம் கேட்டுக்கொள்வேன். என் மாணவர்களின் முகத்தில் புன்சிரிப்பைக் காணவும், இன்னும் வேண்டும் எனக் கேட்பதற்கும் கேளிக்கையான அம்சங்களை முடிந்தவரை புகுத்துவேன். இதற்கு நேரமும் உழைப்பும் தேவை என்றாலும், நல்ல பலன் கிடைக்கும். மாணவர்களோடு நான் தொடர்பை வளர்த்துக்கொள்ள இது துணைபுரியும். மாணவர்களை வியப்பிலாழ்த்தி, உற்சாகமடையச் செய்யும்போது, நான் களைப்படைவதில்லை. அந்நாள் எனக்கு மகிழ்ச்சிகரமாக நிறைவடையும்.

<u>பெற்றோருடன் கற்றல்</u>

மூன்று இளம் மகள்களின் தாய் என்ற முறையில், என் மாணவர்களின் பெற்றோரிடமிருந்து நானும் கற்றுக் கொள்கிறேன். சில சமயங்களில், மத்தியப் பள்ளிகளில் உள்ள பிள்ளைகளுடன் தங்கள் பிள்ளைகளை ஒப்பிட்டுப் பார்த்து அவர்கள் மனம் தளர்ந்து போவார்கள். ஆனால் இந்தப் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள்மீது அளவில்லா அன்பு வைத்திருக்கிறார்கள்; அவர்களை அப்படியே ஏற்றுக்கொண்டு பாராட்டுகிறார்கள். நாம் ஒப்பிட்டுப் பார்க்கும்போது சந்தோஷத்தை இழந்துவிடுகிறோம் என்பது அப்போது எனக்குப் புலப்பட்டது. என் பிள்ளைகள் ஒவ்வொருவரையும் பாராட்டவும், அவர்களுக்காக நேரம் ஒதுக்கவும் நான் கற்றுக் கொண்டேன்.



வகுப்பறையில் ஒரு சந்தோஷமான தருணம், 2000-ஆம் ஆண்டுகள்.

*ஷரி:பா மஸ்தூரா ஷாஹாப்-யோக்கோயாமாவுக்கு நன்றி.*

பெற்றோர்கள் என்ன செய்வதென்று தெரியாத அளவுக்கு ஒரு முட்டுக்கட்டையை எதிர்நோக்கும் இக்கட்டான தருணங்களில், குடும்பங்களோடு சேர்ந்து முயற்சி எடுக்கத் தூண்டப்படுவேன். சில சமயங்களில் என்னிடமும் எந்தத் தீர்வும் இருக்காது. அதை வெளியே சொல்ல நான் சங்கடப்படுவதில்லை. பிரச்சனைக்குத் தீர்வுகாண கூடுதல் நேரம் கேட்பேன். என் மாணவர்களின் பெற்றோரும் என்னை மதிப்பிடாமல் புரிந்து கொள்வார்கள். நாம் எதிர்நோக்கும் பிரச்சனையைப் புரிந்துகொள்ள நேரம் செலவிட்டோமானால், படிப்படியாகத் தீர்வு காணமுடியும். அது சாத்தியமல்லாத ஒன்றல்ல.



பாலஸ்தியர் சிறப்புப் பள்ளியில் கருப்பொருள் சார்ந்த ஒன்றுகூடல்வழி எழுத்தறிவு “உயிரூட்டம்” பெறுகிறது, 2000.

*ஷரி:பா மஸ்தூரா ஷாஹாப்-யோக்கோயாமாவுக்கு நன்றி.*




*ஓல்டு மெக்டோனல்டு ஹாட் ஏ :பார்ம்* விலங்குவடிவ விரல் பொம்மைகள்
c. 2000-ஆம் ஆண்டுகள்

*ஷரி:பா மஸ்தூரா ஷாஹாப்-யோக்கோயாமாவுக்கு நன்றி.*

ஆசிரியர் ஷா தமது மாணவர்களுக்கு ஓல்டு மெக்டோனல்டின் பண்ணை பற்றிய கதையை வாசித்துக் காட்டுகையில், கதைக்கு உயிரூட்ட விலங்குவடிவ விரல் பொம்மைகளைப் பயன்படுத்தினார்.

“Comparison is a thief of joy.
I have learnt to appreciate and make time for each of my children.”

“நாம் ஒப்பிட்டுப் பார்க்கும்போது சந்தோஷத்தை இழந்துவிடுகிறோம். நான் என் பிள்ளைகள் ஒவ்வொருவரையும் பாராட்டவும்,

| | |
|---|---|
| | அவர்களுக்காக நேரம் ஒதுக்கவும் கற்றுக் கொண்டேன்.” |

<u>சார்ஸ் பரவலால் ஏற்பட்ட போராட்டம்</u>

சார்ஸ் கிருமி 2003-ல் பரவியபோது, சிங்கப்பூரிலிருந்த மற்ற பள்ளிகளைப் போலவே எங்கள் பள்ளியையும் மூடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இதனால் ஆக அதிகப் பாதிப்புக்கு உள்ளானவர்கள் எங்கள் மாணவர்களின் பெற்றோர்கள்தான். அவர்கள் தங்கள் பிள்ளைகளை வீட்டில் வைத்துச் சமாளிக்க வேண்டியிருந்தது.

| | |
|---|---|
|  | ஆசிரியர் ஷாவும் (இடது) சக ஆசிரியர்களும், சார்ஸ் கிருமிப் பரவலின்போது மாணவர்களுக்குத் தபாலில் அனுப்பி வைப்பதற்கான கற்றல் பொருட்களை மாணவர்களின் சிறப்புத் தேவைகளுக்கு ஏற்பத் தயாரிக்கின்றனர், 2003.<br><br>*ஷரிஃபா மஸ்தூரா ஷாஹாப்-யோக்கோயாமாவுக்கு நன்றி.* |

தொடர்புத்திறன் குறைபாடு உள்ள எங்கள் மாணவர்களுக்கு வீட்டிலேயே இருப்பது மிகவும் சிரமம். பள்ளிக்குச் செல்வது அவர்களுக்குப் பழக்கப்பட்டுப் போனதால், வெளியே செல்ல விரும்பினார்கள். பெற்றோர்களுக்கு உதவி தேவை என்பதாலும், கற்றலை நிறுத்திவிட முடியாது என்பதாலும், என் குழுவினர் ஒன்றுகூடி செயலில் இறங்கினார்கள். காலியான காலணிப் பெட்டிகளில் கற்றல் பொருட்களை வைத்து, பெற்றோர்களுக்கு அனுப்பி வைத்தோம். தரம் பிரித்தல், எண்ணறிவு, எழுத்தறிவு போன்ற திறன்களை மாணவர்களுக்குச் சொல்லித்தர பெற்றோருக்கு அவை பயன்பட்டன. எங்களால் முடிந்த சிறுசிறு வழிகளில், நாங்கள் படைப்பாற்றலை வளர்த்துக் கொண்டோம்.

மாணவர்களின் ஆதரவாளர்

நான் ஆரம்பநிலை ஆசிரியராக இருந்தபோது, என் வகுப்பில் நடந்தவற்றில் மட்டுமே கவனம் செலுத்தினேன். பிற்பாடு, என் மாணவர்களைச் சுற்றுலாக்களுக்கு அழைத்துச் செல்லத் தொடங்கியபோது, சிலர் அவர்களைத் தவிர்ப்பதைக் கவனித்தேன். அது எனக்கு மிகுந்த வேதனை தந்தது. என் மாணவர்களின் நிலைமை பற்றிய விவரமும் புரிந்துணர்வும் இல்லாததே அந்த நடத்தைக்கான காரணம் என நான் நினைத்தேன். அந்நிலையில் நம்பிக்கை இழக்காமல், சிறப்புத் தேவைகள் உள்ளவர்களுக்காகப் பரிந்து பேசும் முனைப்பில் இறங்கினேன்.

| | |
|---|---|
|  | மாணவர்களைப் பெருவிரைவு ரயில் (எம்ஆர்டி) பயணத்தில் அழைத்துச் செல்கிறார், 1999.<br><br>*ஷரிஃபா மஸ்துரா ஷாஹாப்-யோக்கோயாமாவுக்கு நன்றி.* |

சமூகம் எங்கள் இடத்திற்கு வருகைதந்து, மாணவர்களுடன் தொடர்பை வளர்த்துக் கொள்வதற்கான வாய்ப்பாக, பொது வரவேற்பு நிகழ்ச்சிகளுக்கு என் குழுவினர் ஏற்பாடு செய்தனர். சமூகத்தின் விழிப்புணர்வும் புரிதலும் வளரும்போது, எங்கள் மாணவர்கள் ஆற்றல் பெற்று, முன்னேறக்கூடிய அனைவரையும் உள்ளடக்கிய சமுதாயத்தை நம்மால் உண்மையாக அடைய முடியும்!

ஒவ்வொரு நாளும் நான் கண்விழிக்கும்போது, சிறப்புக் கல்வி ஆசிரியராகத் தொடர்ந்து பங்களிப்பதே என் விருப்பம் என்ற மன உறுதியுடன் எழுவேன். எங்கள் பள்ளியில் இன்னும் நிறைய மாணவர்களின் முகங்களில் புன்சிரிப்பைக் கொண்டுவர என்னால் உதவ முடியும். இந்த நம்பிக்கையே, எத்தனை சிரமங்கள் வந்தாலும் என்னைத் தளரவிடாமல் முன்னெடுத்துச் செல்கிறது.

| | |
|---|---|
|  | ரெய்ன்போ *நிலையத்தில் எழும் "உணர்வுகள்",*<br>ஹரிஷ், ஜெரோம், ரயீஸ், ஷஃபிக்<br>c. 2000-ஆம் ஆண்டுகள்<br><br>*ரெய்ன்போ நிலையத் திரட்டின் மறுபதிப்பு.*<br><br>ஆசிரியர் ஷா ஒரு பள்ளியை வரையச் சொன்னபோது மாணவர்கள் வரைந்த ஓவியம் இது. ரெய்ன்போ நிலையத்தின் யீஷூன் பார்க் பள்ளியில் பயிலும் 16 வயது மாணவர்கள், கட்டடத்தையும் பொருட்களையும் வரைவதற்குப் பதிலாக, பள்ளியில் தங்களுக்கு |

| | |
|---|---|
| | ஏற்பட்ட பல்வேறு உணர்வுகளை வரைந்தனர். |
|  | *என் பள்ளி ஒரு மகிழ்ச்சியான தோட்டம்*<br>லிம் பிங்<br>c. 2000-ஆம் ஆண்டுகள்<br><br>*ஷரி:பா மஸ்துரா ஷாஹாப்-யோக்கோயாமா திரட்டின் மறுபதிப்பு.*<br><br>ஏழு வயது மாணவர் வரைந்த இந்த ஓவியம், யீஷூன் பார்க் பள்ளியை அழகியத் தோட்டமாகவும், ஆசிரியர் ஷா உள்ளிட்ட ஆசிரியர்களை அழகிய பூக்களாகவும் படைக்கிறது. |

| | |
|---|---|
|  | கருத்துப் பரிமாற்ற உதவிப்பொருள்<br>c. 2000-ஆம் ஆண்டுகள்<br><br>*ஷரி:பா மஸ்துரா ஷாஹாப்-யோக்கோயாமாவின் திரட்டு.*<br><br>இந்தச் சொல்-படம் கருத்துப் பரிமாற்ற உதவிப்பொருளை, வாய் பேசமுடியாத மாணவர்களுக்காக ஆசிரியர் ஷா தயாரித்தார். மாணவர்கள் தங்களது தேவைகளையும் விருப்பங்களையும் வெளிப்படுத்த, ஒவ்வொரு பக்கத்திலும் பல்வேறு வகையான சொற்களும் படங்களும் இருக்கின்றன. மாணவர்கள் எதையாவது சொல்ல விரும்பும்போது, அட்டைகளை வெல்க்ரோ கீற்றுகள் மீது ஒட்டுவார்கள். எடுத்துக்காட்டாக, இங்கே மாணவர் சொல்லியிருப்பது: ஆசிரியர் ஷா, எனக்கு மைலோ வேண்டும். |

*இதிலிருந்து எடுக்கப்பட்டது:*
*ஷரி:பா மஸ்துரா ஷாஹாப்-யோக்கோயாமாவுடன் கல்வி அமைச்சின் மரபுடைமை நிலையம் நடத்திய பேட்டி, 7 ஜூன் 2024.*

மொழிபெயர்ப்பு பற்றி ஏதேனும் கருத்துகள் இருந்தால், தயவுசெய்து கல்வி அமைச்சின் மரபுடைமை நிலையத்துடன் moe_heritage_centre@moe.gov.sg எனும் மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளுங்கள். நன்றி.